# திருஅருட்பிரகாச வள்ளலார்

சன்மார்க்கத் தமிழ் திங்களிதழ்

தனிஇதழ் ரூ.10/- ஆண்டு சந்தா ரூ.110/-

அருள்: 11 சோபகிருது ஆண்டு/ மாசி - பங்குனி / மார்ச் -2024 ஜோதி: 03

மாத பூசத்திருநாள்: 20.03.2024 அடுத்த மாதம் பூசம்: 16.04.2024



தெய்வத்திரு.

**சதீஷ்ராஜ் அடிகளார்,**

நிறுவனர்

**தயவுத்திருமதி.**

**தனலட்சுமி அம்மையார்,**

ஆசிரியர், வெளியிடுபவர்

மற்றும் உரிமையாளர்

பதிவு அலுவலகம்:

**திருஅருட்பிரகாச வள்ளலார் அலுவலகம்,**

புதிய எண் 33, பழைய எண். 17, கென்னடி சதுக்கம்,

முதன்மைச்சாலை, சென்னை- 600011.

தொடர்புக்கு 044-25570770 9003034056


## பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| திருக்குறள் சன்மார்க்க உரை | 4 |
| நீங்களும் கல்வி தொண்டு செய்யலாம் | 5 |
| அருட்பெருஞ்ஜோதி அகவல் உரை | 6 |
| மகாத்மா காந்தியின் சுயசரிதை | 8 |
| அருட்பயணம் | 11 |
| வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள் | 12 |
| கலங்காதே நெஞ்சே | 14 |
| நம்மை நாமே திருத்திக் கொள்வது | 20 |
| நம்மை தடுக்கும் 7 மறைப்பு நமக்குள் 7 திரை | 23 |
| தைப்பூசம் அன்னதானம் இல்லங்கள் பட்டியல் | 26 |
| ஒழிவில் ஒடுக்கம் | 30 |
| நீங்களும் அன்னதர்மம் செய்யலாம் | 34 |

# திருக்குறள் - சன்மார்க்க உரை



## வரைவின் மகளிர்

### (மாயைப் பரத்தையர் வாழ்வு)

**அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். 911**

ஆன்ம நேய உருக்கம் இல்லாது உலகியல் ஈடுபாட்டை விரும்புகின்ற மாயை முதலியோர் மயக்கும் வார்த்தைகள் வாழ்வில் குறைகளை உண்டாக்கும்.

**பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். 912**

மண்பொன்பெண்களினாலான பயன் விழைந்து பேசிவாழும் மாயை முதலியோர் இயல்பறிந்து அகல வேண்டும்.

**பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று. 913**

பணம் விரும்பிப் பண்பினை விரும்பா மாயைப்பெண்டிர் கூட்டம் அறியாமை இருளில் அறிவிலாருடன் கூடி மகிழ்வது போன்றது.

**பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். 914**

அருட்பயனால் ஆகும் பேரின்ப நுகர்ச்சியை உணர்ந்தவர் மாயை என்னும் புல் ஒழுக்கத்தால் கிடைத்த இன்பத்தைப் போற்றமாட்டார்கள்.

**பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர். 915**

மன இருளை மதிஒளி யாக்கிக் கொண்டவர் வயப்பட்டு ஆன்மஒளியை இழந்து விடமாட்டார்கள்.

**தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். 916**

ஆன்ம இயல்பாகிய உயிர்இரக்க அறிவு உடையவர் மாயைப் பரத்தையர்பால் கிட்டும் ஐம்புல இன்பத்திற்கு ஏங்கித் தடுமாற்றம் அடையார்.

**நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள். 917**

உயிர்இரக்க ஒழுக்கம் என்னும் பண் பினால் முழுமை பெற்றவர் காம வெகுளி மயக்கங்கட்கு இடமாகும் மாயைப்பரத்தையர் இன்பத்தில் அழுந்த மாட்டார்கள்.

**ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. 918**

உயிர் அறிவும் அருளறிவும் உடனாகப் பெறுகின்றவர்கட்கு மாயை முதலியோர் வழங்கும் இன்பம், மோகினி என்னும் அசுத்தமாயை வழங்கும் சேர்க்கைப் போன்றது ஆகும்.

**வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. 919**

காமம், வெகுளி, மயக்கம் முதலிய தகுதியற்றவர் தோள்களைத் தழுவும் மாயைப் பெண்டிர் முயக்கம் நரகக் குழியேயாகும்.

**இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு 920**

திருவருள் பெற முயல்பவர்கள் மதி மயக்கு– வஞ்சனைச் செயல்– உடல்வேறு –உணர்வு வேறு– உறுபொருள் வேறாகிக் கலக்கும் மாயையாதியர் சேர்க்கை ஆகியவற்றை நீக்கி வாழ்பவர்களாவர்.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க

# அருள்ஜோதி கல்வி அறக்கட்டளை




எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை–600011

தொலைபேசி: 9003034056, 9600024878

இணையதளம்: www.aruljothitrust.com மின்னஞ்சல்: aruljothipadasalai@gmail.com





## நீங்களும் கல்வித்தொண்டு செய்யலாம்!

அன்புடையீர், வணக்கம்! வாழ்த்துக்கள்!! தாங்களும் தாங்கள் செய்யும் தொழிலும் தொண்டும் மேன்மேலும் சிறந்து விளங்க போற்றி வாழ்த்துகிறோம்.

பொன்னேரி தாலுக்காவில் கடல் சூழ்ந்த லைட்ஹவுஸ் குப்பம் உள்ளது. அவ்விடத்தில் மேற்படி அறக்கட்டளையின்கீழ் அருள்ஜோதி குருகுலப் பாடசாலை என்ற பெயரில் எங்கள் பள்ளி நடைபெறுகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி முதல் 5–ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அரசு அங்கீகாரம் பெற்ற (பதிவெண் 24/239–2005) இப்பள்ளியில் 350 பிள்ளைகள் கல்வி பயின்று வருகின்றனர். அறக்கட்டளையின் சார்பாக இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்குச் சீருடையும் பாடப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இந்தப் புண்ணியத் தொண்டில் தாங்களும் பங்கேற்கலாம். இன்னும் சில ஆண்டுகளில் இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் உயர்கல்வி பெற்று வாழ்வில் உயர்வடைவதுடன், வள்ளலார் போதனைகளையும் மற்றும் ஆன்மிக கல்வியும் பெறுவதனால் ஒழுக்க நெறியுடன் உத்தம சீலர்களாகவும் திகழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பது திண்ணம்.



| அன்ன தர்மம் விவரம்: | |
|---|---|
| காலை உணவு | ரூ.2000/– |
| மதிய உணவு | ரூ.5000/– |
| **மதிய சிறப்பு உணவு** | |
| (வடை, பாயாசம் உட்பட) | ரூ.8000/– |

இங்ஙனம்

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
என்று எண்ணும்
**தவத்திருமதி. தனலட்சுமி அம்மையார்,**
தலைவர்

காணிக்கைகள் **ARULJOTHI EDUCATIONAL TRUST** என்ற பெயருக்கு செக்காகவோ, டி.டி.யாகவோ அனுப்பலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

<u>அருளாளர் பதிவு படிவம்</u>

பெயர்:

முகவரி: பதிவெண்: ________

# அருட்பெருஞ்ஜோதி

## அகவல் உரை

**நீரினில் சத்தர்கள் நிறைவகை உறைவகை**
**ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 422**

*நீரினில் பரவுதல், விரிதல், சுருங்குதல், உறைதல் போன்ற பலவாகிய சக்திகளுக்கு இடமாகிய சத்தர்கள் (ஆற்றல்) நிறைந்தும், நீங்காமல் தங்கி இருந்தும் பயன்படும் வகையில் படைத்தருளியது அருட்பெருஞ்ஜோதி.*

**நீர்இடை உயிர்பல நிகழ்உறு பொருள்பல**
**ஆர்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 424**

*நீரில் எண்ணற்ற உயிர்வகைகளும், அவைகள் உண்டு உறையப் பலவகைப் பொருள்களும், மற்றும் உப்புகள், மணிகள், எண்ணெய் வகைகள், எரிவாயுக்கள் போன்ற பயன்படும் பொருள்களையும் பொருந்த அமைத்தருள்வது அருட்பெருஞ்ஜோதி.*

**நீர்இடை நிலைபல நிலைஉறு செயல்பல**
**ஆர்கொள வகுத்த அருட்பெருஞ் ஜோதி 426**

*நீர் குளிர்ந்து பனிக்கட்டியாதல், அது உருகி நீராதல், ஆவியால் இயந்திர இயக்கம் போன்ற தன்மைகளும், நீரினிடம் அமுதம், பொருள், விடம் போன்ற பல நிலைகளும்; அவை செய்யும் ஆக்கல், வளர்த்தல், அழித்தல் செயல்களால் அசையும், அசையா உயிரினங்கள் தோன்றவும், பெருகவும், அழியவும் ஆன பல தன்மைகளைப் பொருந்த அமைத்துள்ளது அருட்பெருஞ்ஜோதி.*

**நீர்உறு பக்குவ நிறைவுறு பயன்பல**
**ஆர்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 428**

*நீருக்கென்று வெப்பமுறல், தன்மையாதல், ஆவியாதல், பனிக்கட்டியாதல் போன்ற பக்குவ நிலைகளும்; அவற்றால் ஏற்படும் பயன்கள் பலவும் (உணவு சமைத்தல், மென்மையாக்குதல், விதைகள் முளைக்க வைத்தல், தூய்மையாக்கல்) நிறைவுற அமைத்துள்ளது அருட்பெருஞ்ஜோதி.*

**நீர்இயல் பலபல நிறைத்துஅதில் பிறவும்**
**ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ் ஜோதி 430**

*நீராகிய பூதத்துக்கு மேலே கூறியன தவிர, மேலும் பற்பல இயல்புகளை ஒழுங்காக நிறுத்தி உயிர்கள் பயனடையச் செய்ய உதவுவது அருட்பெருஞ்ஜோதி.*

### தீ இயல்

**தீயினில் சூட்டுஇயல் சேர்தரச் செலவுஇயல்**
**ஆய்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 432**

*தீயினுடைய வெப்பம், பொருள்கள், காற்று, நீர், நிலம், ஆகாயத்தில் உள்ள சூரியன், விண்மீன்கள் இவற்றில் மறைந்தும் வெளிப்பட்டும் இருந்து; பலவகைச் செயல்கள் செய்து அமையப் படைத்துள்ளது அருட்பெருஞ்ஜோதி.*

**தீயினில் வெண்மைத் திகழ்இயல் பலவாய்**
**ஆய்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 434**

*தீயானது வெண்மை நிறமாக இருந்தும் அதில் பொன்மை, பசுமை, நீலம் போன்ற பல நிறங்கள் உள்ளடங்கி அமைய வகுத் துள்ளது அருட்பெருஞ்ஜோதி.*

**தீஇடைப் பூ எலாம் திகழ்உறு திறம்எலாம்**
**ஆய்உற வகுத்த அருட்பெருஞ் ஜோதி 436**

*தீயின் எங்கும் பரந்து நிலவும் பண் பினால், பொருள்கள் பெருகி விரிந்து உருவாகி விளங்குகின்றன. அவற்றை உரு வாக்கும் ஆற்றலைத் தீயினுக்கு அமையு மாறு படைத்தருளியது அருட்பெருஞ் ஜோதி.*


**தீஇடை ஒளியே திகழ்உற அமைத்துஅதில்**
**ஆய்பல வகுத்த அருட்பெருஞ் ஜோதி 438**

*தாவரங்கள் உணவு தயாரித்தல், உணவு சமைத்தல், நிலவுக்கு ஒளி தருதல், வெளிச் சம் தரல் மற்றும் தீயினிடம் ஒளிரும் இயல்பு விளங்க அமைத்தும்; கல், மரம், மேகம் முதலான பொருள்களில் உள்ள தீயின் நலன்கள் யாவற்றையும் ஆராய்ந்து பெறப் படைத்தருள்வது அருட்பெருஞ் ஜோதி.*

**தீஇடை அருநிலை திருநிலை கருநிலை**
**ஆய்உற அமைத்த அருட்பெருஞ் ஜோதி 440**

*தீயினிடம் மறைந்துள்ள நிலை (அருவ நிலை), பெருகும்நிலை (உருவ நிலை), பேரொளிநிலை (கருநிலை/வெம்மை) ஆகிய மூன்று நிலைகளையும் பொருத் தமுற அமைத்தருளியது அருட்பெருஞ் ஜோதி.)*





சென்ற மாதத் தொடர்ச்சி...

# மகாத்மா காந்தியின் சுயசரிதை...

## 22 கடவுள் யாரைக் காக்கிறார்?

வருங்காலத்தில் இந்தியாவுக்குத் திரும்புவது என்ற நம்பிக்கையை எல்லாம் இப்பொழுது அடியோடு கைவிட்டுவிட்டேன். ஓர் ஆண்டில் திரும்பி வந்துவிடுவேன் என்று என் மனைவிக்கு வாக்களித்திருந்தேன். நான் திரும்புவதற்கான ஏது எதுவுமில்லாமலேயே அந்த ஓராண்டும் முடிந்துவிட்டது. ஆகையால், அவளையும் குழந்தைகளையும் வரவழைத்துக்கொள்ளுவது என்று தீர்மானித்தேன்.

அவர்கள் தென்னாப்பிரிக்காவுக்கு வந்துகொண்டிருந்த கப்பலில்என் மூன்றாவது மகன் ராமதாஸ், கப்பல் காப்டனுடன் விளையாடிக் கொண்டிருக்கையில் விழுந்து கையை முறித்துக் கொண்டான். காப்டன் அவனை நன்றாகக் கவனித்துக் கொண்டதோடு கப்பல் டாக்டர் அவனுக்குச் சிகிச்சை செய்யும் படியும் ஏற்பாடு செய்தார். கட்டுப்போட்ட கையோடு ராமதாஸ் கப்பலிலிருந்து இறங்கினான். வீட்டுக்குப் போனதும் தக்க டாக்டர் ஒருவரைக் கொண்டு அவன் காயத்திற்குக் கட்டுக்கட்ட வேண்டும் என்று கப்பல் டாக்டர் ஆலோசனை கூறினார். மண் சிகிச்சையில் நான் பூரணமாக நம்பிக்கை வைத்திருந்த சமயம் அது. என்னுடைய அரைகுறை வைத்தியத்தை நம்பிய என் கட்சிக்காரர்கள் சிலரையும் மண், நீர் சிகிச்சை செய்து கொள்ளும்படி தூண்டிவந்தேன்.

இந்த நிலைமையில் ராமதாஸ் விஷயத்தில் நான் என்னசெய்வது? அப்பொழுது அவனுக்கு எட்டு வயது. அவனுக்கு நான் கட்டு கட்டிவிடுவதில் சம்மதந்தானா என்று அவனைக் கேட்டேன்.

அவன் சிரித்துக்கொண்டு சம்மதம் என்றான். தனக்கு நல்லது இன்னது என்பதை அந்த வயதில் அவன் முடிவு செய்து கொள்ளுவது சாத்தியமில்லை. ஆனால், அரை குறையான வைத்தியத்திற்கும் சரியான வைத்திய சிகிச்சைக்கும் உள்ள பேதம் அவனுக்குத் தெரியும். என்னுடைய வீட்டு வைத்தியப் பழக்கத்தை அவன் அறிவான். தன்னை என்னிடம் ஒப்படைத்து விடுவதில் அவனுக்கு நம்பிக்கையும் இருந்தது. பயந்து நடுங்கிக்கொண்டே அவனுக்குப் போட்டிருந்த கட்டை அவிழ்த்தேன். புண்ணை அலம்பினேன். அதன்மீது சுத்தமான மண் பற்றும் போட்டேன்.

பிறகு கைக்குக் கட்டுப் போட்டேன். புண் முற்றும் ஆறிவிடும் வரையில் ஒரு மாத காலம் இவ்விதம் கட்டுப்போடுவது தினந்தோறும் நடந்து வந்தது. எந்தத் தொந்தரவுமே இல்லை; சாதாரண சிகிச்சையினால் எவ்வளவு காலத்தில் இப் புண் ஆறிவிடும் என்று கப்பல் டாக்டர் கூறியிருந்தாரோ அதைவிட இப்பொழுது அது ஆறுவதற்கு அதிக காலம் ஆகவில்லை.

இதுவும், என்னுடைய மற்றப் பரீட்சைகளும், வீட்டு வைத்திய முறையில் எனக்கு இருந்த நம்பிக்கையை அதிகப் படுத்தின. நான் இப்பொழுது அதிகத் தன்னம்பிக்கையுடன் இம்முறைகளை மேற்கொண்டும் கையாளலானேன். மற்றும் பல நோய்களுக்கும் இம்முறையைக் கையாண்டேன். புண்கள், ஜுரங்கள், அஜீரணம், காமாலை ஆகிய நோய்களுக்கெல்லாம் மண், நீர் வைத்தியம் செய்து வந்தேன். அநேகமாகக் குணமாகிக் கொண்டே வந்தன.

ஆனால், தென்னாப்பிரிக்காவில் இதில் எனக்கு இருந்த நம்பிக்கை இப்பொழுது இல்லை. இந்தச் சிகிச்சைகளில் அபாயங்களும் உண்டு என்பதை அனுபவத்தில் அறிந்திருக்கிறேன். ஆகையால், இந்தச் சோதனைகளைக் குறித்து நான் இங்கே கூறியிருப்பது, அவற்றின் வெற்றியை எடுத்துக்காட்டுவதற்காக அன்று.

எந்தச் சோதனையும் முழுமையான வெற்றியைக் கண்டது என்று நான் கூறிக் கொள்ளுவதில்லை. வைத்தியர்கள்கூட, தங்கள் சோதனைபூரண வெற்றியை அளித்தது என்று சொல்ல முடியாது. புதிய சோதனைகளைச் செய்ய முற்படுகிறவர், முதலில் அவற்றைத் தம்மிடமே செய்துகொண்டு பரீட்சிக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதே என் நோக்கம். இதனால், உண்மையைத் துரிதமாகக் கண்டுபிடிப்பது சாத்தியமாகிறது. அத்துடன் யோக்கியமாகப் பரிசோதனை செய்பவரைக் கடவுள் எப்பொழுதும் காப்பாற்றுகிறார்.

இயற்கை வைத்திய சோதனையில் எவ்வளவு ஆபத்துக்கள் உண்டோ, அவ்வளவு ஆபத்துக்கள் ஐரோப்பியர்களுடன் நெருங்கிய தொடர்பை வளர்த்துக்கொள்ளுவதற்குச் செய்யும் சோதனைகளிலும் இருக்கின்றன. அந்த அபாயங்கள் வேறு வகையானவை என்று மட்டுமே சொல்லலாம். ஆனால், இந்தத் தொடர்புகளை உண்டாக்கிக்கொள்ளுவதற்குச் செய்த முயற்சியில் ஆபத்துக்கள் இருக்குமென்று நான் நினைக்கவே இல்லை. என்னுடன் வந்து தங்குமாறு போலக்கை அழைத்தேன். சொந்தச் சகோதரர்கள் போல நாங்கள் வாழ ஆரம்பித்தோம். சீக்கிரத்தில் ஸ்ரீமதி போலக் ஆகவிருந்த பெண்ணுக்கும் அவருக்கும் சில ஆண்டுகளுக்கு முன்பே விவாகம் நிச்சயமாகியிருந்தது. ஆனால், அனுகூலமான வேளையை எதிர் பார்த்துத் திருமணம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. மண வாழ்க்கையில் நிலைபெறுவதற்கு முன்னால் கொஞ்சம் பணம் சம்பாதித்து வைத்துக் கொள்ளலாமென்று ஸ்ரீ போலக் விரும்பினார் என்பது என் அபிப்பிராயம். ரஸ்கினின் நூல்களை என்னைவிட அவர் நன்றாக படித்திருந்தார். ஆனால், அவருடைய மேனாட்டுச் சூழ்நிலை, ரஸ்கினின் உபதேசங்களை உடனே அனுபவத்திற்குக் கொண்டுவருவதற்குத் தடையாக இருந்தது. அவரிடம் நான் பின்வருமாறு கூறி வாதாடினேன்: "உங்கள் விஷயத்தில் உங்கள் இருவருக்கும் இத்தகைய ஒற்றுமை ஏற்பட்டிருக்கும்போது, பொருளாதாரக் காரணங்களுக்காக விவாகத்தை ஒத்தி வைத்துக்கொண்டு போவது நியாயமே அல்ல. வறுமை ஒரு தடையாக இருக்குமாயின், ஏழைகள் மணம் செய்து கொள்ளவே முடியாது. மேலும், இப்பொழுது நீங்கள் என்னுடன் தங்கியிருக்கிறீர்கள். வீட்டுச் செலவைப்பற்றிய கவலையும் இல்லை.

ஆகையால், எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு சீக்கிரத்தில் நீங்கள் மணம் செய்துகொண்டுவிட வேண்டும்." முந்திய ஓர் அத்தியாயத்தில் நான் கூறியிருப்பதைப் போல, ஸ்ரீ போலக்குடன் ஒரு விஷயத்தைக் குறித்து நான் இரு முறை விவாதிக்க வேண்டி வந்ததே இல்லை. என் வாதத்திலுள்ள நியாயத்தை அவர் ஒப்புக் கொண்டார். அச்சமயம் இங்கிலாந்தில் இருந்த ஸ்ரீமதி போலக்குக்கு இதைக் குறித்து உடனே கடிதம் எழுதினார். அவரும் இந்த யோசனையைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார். சில மாதங்களில் ஜோகன்னஸ்பர்க் வந்து சேர்ந்தார். கல்யாணத்திற்குச் செலவு செய்யும் எண்ணம் இல்லை. விசேட ஆடைகள் அவசியம் என்றும் கருதப்படவில்லை தமது பந்தத்திற்கு முத்திரையிட இவர்களுக்கு எந்த மதச் சடங்குகளுங்கூட அவசியப்படவில்லை. ஸ்ரீமதி போலக் பிறப்பினால் கிறிஸ்தவர்; போலக், யூதர். நீதியின் தருமமே இவர்கள் இருவருக்கும் பொதுவான மதம். இந்த விவாக சம்பந்தமாக நடந்த ஒரு வேடிக்கையான சம்பவத்தைக் குறித்துச் சிறிது கூற விரும்புகிறேன். டிரான்ஸ்வாலில் இருக்கும் ஐரோப்பியரின் கல்யாணங்களைப் பதிவு செய்து கொள்ளும் அதிகாரி, கறுப்பு அல்லது மற்ற நிறத்தினரின் விவாகங்களைப் பதிவு செய்யக்கூடாது. இந்தக் கல்யாணத்தில் நான் மாப்பிள்ளைத்தோழனாக இருந்தேன்.

இதற்கு ஓர் ஐரோப்பியர் எங்களுக்குக் கிடைக்கமாட்டார் என்பதல்ல. ஆனால், அந்த யோசனையைப் போல ஒப்புக்கொள் ளவில்லை. ஆகையால், நாங்கள் மூவரும் கல் யாணப் பதிவு அதிகாரியிடம் சென்றோம். நான் மாப்பிள்ளைத் தோழனாக இருந்த ஒரு விவாகத்தில், தம்பதிகள் வெள்ளக் காரர்கள்தான் என்று அவர் எப்படி நிச்சயமாக நம்பி விடமுடியும்? தம்பதிகள் வெள்ளையர்தானா என்பதை விசாரிப்பதற் காக விவாகப் பதிவை ஒத்தி வைப்ப தாக அந்த அதிகாரி கூறினார். மறுநாளோ, ஞாயிற்றுக்கிழமை. அதற்கு அடுத்த நாள் புது வருடப் பிறப்பு நாளாதலால் விடுமுறை நாள். பக்தியுடன்ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த ஒரு திருமணத்துக்கு இத்தகைய அற் பமான சாக்குப்போக்குக் கூறித் தேதியை ஒத்திவைப்பதென்றால், அதை யாரும் சகித்துக்கொண்டிருக்க முடியாது. பதிவு இலாகாவின் தலைவரான பிரதம மாஜிஸ் டிரேட்டை எனக்குத் தெரியும்.

தம்பதிகளுடன் அவர் முன்பு சென்றேன். அவர் சிரித்தார். பதிவு அதிகாரிக்கு ஒரு குறிப்பும் கொடுத்தார். அதன் பேரில் முறைப்படி திருமணம் பதிவாயிற்று.

இதுவரையில் எங்களுடன் வசித்து வந்த ஐரோப்பியர்கள், அநேகமாக எனக்கு ஏற்கனவே தெரிந்தவர்கள்தான். ஆனால் இப்பொழுதோ எங்களுக்கு முற்றும் புதியவரான ஓர் ஆங்கிலப் பெண் எங்கள் குடும்பத்தில் பிரவேசித்தாள். புதிதாக மணமான இத் தம்பதிகளுக்கும் எங்களுக் கும் எப்பொழுதேனும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. ஸ்ரீமதி போலக்கும் என் மனை விக்கும் சில மனஸ்தாபங்கள் அவ்வப் போது இருந்தது உண்டு. ஆனால், அவை சிறந்த வகையில் ஒழுங்காகவும் ஒற்றுமை யாகவும் உள்ள குடும்பங்களில் சாதாரண மாக ஏற்படும் மனஸ்தாபங்களைவிட எந்த விதத்திலும் அதிகமானவை அல்ல.

இன்னும் ஒன்றும் நினைவில் இருக்க வேண்டும். முக்கியமாக என் குடும்பம் பற்பல வகையானவர்கள் சேர்ந்த கலப்புக் குடும்பம் என்றே கருதவேண்டும். எல்லா வகையானவர்களும், வெவ்வேறு குணாதிசயங்களுள்ளவர்களும் தாராள மாக இதில் சேர்த்துக் கொள்ளப்பட்ட னர். இதைக் குறித்தும் நாம் நினைக் கும்போது ஒரே சாதி, வெவ்வேறு இனம் என்பதற்கிடையே உள்ள பேதமெல்லாம் வெறும் கற்பனையே என்பதைக் கண்டு கொள்ளுகிறோம். நாம் எல்லோரும் ஒரே குடும்பமே. வெஸ்டின் விவா கத்தையும் இந்த அத்தியாயத்திலேயே நடத் திவிடுகிறேன். என் வாழ்க்கையில் இந்தக் கட்டத்தில் பிரம்மச்சரியத்தைப் பற்றிய என் எண்ணம் பூரணமாக வளர்ச்சியடை யவில்லை. ஆகவே, என் பிரம்மச்ச ரிய நண்பர்கள் எல்லோருக்கும் மணமாகி விட வேண்டும் என்பதில் நான் அதிகச் சிரத்தை கொண்டேன். வெஸ்ட், தமது பெற்றோரைப் பார்த்துவிட்டு வருவதற் காக லௌத்துக்கு யாத்திரை சென்றார். சாத்தியமானால் விவாகம் செய்துகொண்டு திரும்புமாறு அவருக்குச் சொல்லியனுப் பினேன். போனிக்ஸ் எங்கள் எல் லோருக்கும் பொது வீடு. நாங்கள் எல்லோரும் விவசாயிகளாகவே ஆகி விட் டதாக எண்ணிக்கொண்டதால், விவா கத்தைப்பற்றியும், அதன் சாதாரணமான விளைவுகளைக் குறித்தும் நாங்கள் பயப்ப டவில்லை. வெஸ்ட் ஸ்ரீமதி வெஸ்ட்டுடன் திரும்பி வந்தார். அவர், லீஸ்டரைச் சேர்ந்த அழகிய இளம்பெண். லீஸ்டர் தொழிற் சாலையில் செருப்புத் தயாரிக்கும் வேலை செய்யும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். அத் தொழிற்சாலையில் வேலை செய்து ஸ்ரீமதி வெஸ்ட்டுக்கும் கொஞ்சம் அனுப வம் உண்டு. 'அழகிய பெண்' என்று நான் அவரைக் கூறியது, அவருடைய குண சீலத்தின் அழகு என்னை உடனே கவர்ந் திருந்ததனால்தான். உள்ளத்தின் தூய்மை யிலேயே உண்மையான அழகு இருக்கிறது. ஸ்ரீ வெஸ்டுடன் அவருடைய மாமியாரும் வந்தார். அவ்வயோதிக மாது இன்றும் உயிருடன் இருக்கிறார். தமது உழைப்பு, உற் சாகம், சந்தோஷமான சுபாவம் ஆகி யவைகளினால் அவர், நாங்கள் எல்லோ ரும் வெட்கப்படும்படி செய்துவிட்டார். விவாகம் செய்து கொள்ளுமாறு இந்த ஐரோப்பிய நண்பர்களை நான் தூண்டி யதைப் போன்றே, இந்தியாவிலிருக்கும் தங்கள் குடும்பங்களைத் தருவித்துக் கொள் ளுமாறு இந்திய நண்பர்களையும் உற்சா கப்படுத்தினேன். இவ்விதம் போனிக்ஸ் ஒரு சிறு கிராமமாக வளர்ந்தது. ஆறு குடும்பங்கள் அங்கே வந்து குடியேறி வளர ஆரம்பித்தன.



# வடலூர் அருட்பயணம்

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி!

ஒவ்வொரு மாதப்பூச நன்னாளன்றும் அருள்ஜோதி அன்ன ஆலயம் சார்பாக, வடலூர் அருட்பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

<u>அருட்பயணத்தில் தரிசிக்கப்படும் திருத்தலங்கள்</u>

1.சத்திய தருமச்சாலை, 2.சத்திய ஞானசபை, 3. வள்ளல் பெருமான் அவதரித்த மருதூர் இல்லம், 4.கருங்குழி இல்லம் 5.தீஞ்சுவை நீரோடை மற்றும் 6. மேட்டுக்குப்பம் சித்திவளாகம்.

இந்தப் புனித பயணத்தில் கலந்துகொள்பவர்கள் ஏழு நாட்களுக்கு முன்னதாகவே பதிவு செய்ய வேண்டும். பதிவுக்கட்டணம் ரூ.900 (உணவு உள்பட) பயணம் அருள்ஜோதி அன்ன ஆலயத்தில் இருந்து காலை 6.30 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை 5.00 மணிக்கு அழைத்துவரப்படுவர். எனவே பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புக்கு: 9003034056**

**மாதப்பூச நாள்: 20-03-2024**

**குறிப்பு: அடுத்த பயணம்: 16-04-2024**

# வள்ளலாருக்கு மட்டுமே வாய்த்த வரங்கள்

(மூன்றாவது தத்துவம்)

## மெய்யருள் திருவைத் திருமணம் செய்து வைத்தது

அருள்ஒளித் திருவை திருமணம் செய்து வைத்ததை 43ம் தலைப்பில் பார்த்தோம். இங்கே மெய்யருள் திருவை வள்ளலாருக்குத் திருமணம் செய்து வைக்கிறார் ஆண்டவர்.

ஆண்டவர் இதுவரை எந்த ஒரு ஞானியையும் தனது குலத்துக்கு முதன் மகனாக ஆக்கியதில்லை. அவ்வாறு முதன் மகனான வள்ளற் பெருமானாருக்கு அருள் ஒளித்திருவைத் திருமணம் செய்து வைத்ததோடு மெய்யருள் திருவையும் திருமணம் செய்து வைத்ததாகப் பெருமானார் குறிப்பிடுகிறார். இப்பெரிய பேறு, ஆண்டவராலே பெண் பார்க்கப் பெற்று, ஆண்டவராலேயே திருமணம் செய்து வைக்கப் பெற்ற பேறு யாருக்குக் கிடைக்கும்? வள்ளலாருக்குக் கிடைத்தது. இனி யாருக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ பாடலைப் பார்ப்போம்.

**அன்புடை மகனே மெய்யருள் திருவை**
**அண்டர்கள் வியப்புற நினக்கே**
**இன்புடை உரிமை மணம்புரி விப்பாம்**
**இரண்டரைக் கடிகையில் விரைந்தே**
**துன்புடை யவைகள் முழுவதும் தவிர்ந்தே**
**தூய்மைசேர் நன்மணக் கோலம்**
**பொன்புடை விளங்கப் புனைந்துகொள் என்றார்**
**பொதுநடம் புரிகின்றார் தாமே 4856**

---

## வானைவிடவும், வான்மழையை விடவும் கருணையில் தாம் உயர்ந்தது

வான்மழையே உலக உயிர்களுக்கு வளப்பத்தை வழங்கும் ஒரு பெரிய கருணையை உடையது. வான் மழைக்குரிய கருணைக்கு உலகமே, உலக உயிரினங்கள் அனைத்தும் என்ன கைமாறு செய்ய முடியும்? என

**கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு.**
**என்னாற்றுங் கொல்லோ உலகு**

என்று கேட்பார் வள்ளுவர். ஆனால் அவரே அந்தமாரி மாட்டு ஒரு கேடும் உளதே என்பார்.

**கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை**

என்பார். உலகம் உலகத்து உயிர்கள் இவைகள் வேண்டும் போதும், வேண்டப்பட்ட எல்லாப் பகுதிக்கும் மழை கிடைக்காது. மழை விழும் போது உலக உயிர்கள் தழைக்கின்றன. ஆகவே மழைக்கோ, வானுக்கோ பூரண கருணை கிடையாது என்பது ஞானிகள் தம் கருத்து. இவ்வாறு

ஞானிகளால் பழிக்கப் படும் வான் அவர் களின் பழிக்கு நாணி, ஆண்டவரிடம் பூரண கருணையைத் தனக்கும் தரும்படி, கேட்டுக் கொண்டே இருக்கின்றதாம். ஆண்டவர் இதுவரை அதற்குரிய பூரண கருணையை கொடுக்காமலே இருக் கின்றாராம். அந்த பூரண கருணை வளர் அமுதம் என்றொரு அமுதத்துக்குள் இருக் கிறது. அந்த வளர் அமுதம் திருச்சிற்றம்ப லத்திலே இருக்கிறது.

திருச்சிற்றம்பலம் என்பது சன்மார்க் கமே ஆகும். சன்மார்க்கம் திருச்சிற்றம்ப லமே ஆகும். இதனை

**ஓர்தருசன் மாத்திரமாம் திருச்சிற்றம் பலத்தே**
**ஓங்குகின்ற தனிக் கடவுள் ஒருவருண்டே கண்டீர்**

என்று "திருச்சிற்றம்பலத் தெய்வமணி மாலை" என்ற பகுதியில் வள்ளலார் கூறு கிறார்.

இதுவரை வானுக்கு ஏன் அருட்பெ ருஞ்ஜோதி ஆண்டவர் அந்த வளர் அமு தத்தை வழங்கவில்லை எனில், வான் ஆனது சன்மார்க்கமாம் முழுக் கருணை நெறியைச் சாராததினாலே ஆகுமாம். வள்ளலார் தான் சன்மார்க்க நெறிக்கு முற்றிலும் அருகரான பிறகு தமக்குத் தர வேண்டும் என ஆண்டவரைக் கேட் கிறார். நீர் தரவில்லை எனில் என் உயிர் நீத்து நின்மேல் பழி போடுவேன் எனவும் ஆண்டவரை எச்சரிக்கிறார்.

பாடலைப் பார்ப்போம்.



**வான் வேண்டு சிற்றம் பலத்தே**
**வயங்கி வளர்அமுதத்**
**தேன்வேண்டி னேனித் தருணத்**
**தருள்செய்க செய்திலையேல்**
**ஊன் வேண்டும் என்னுயிர் நீத்து**
**நின்மேல் பழியோ விளைப்பன**
**நான் வேண்டு மோபழி தான் வேண்டு**
**மோ சொல்க நாயகனே 5358**

---

# இரக்கமாம் கருணையையும் வள்ளலாரையும் ஒன்றாய் இருத்தியது

கருணை, இரக்கம், தயவு இம்மூன்றும் ஒரே பொருளைத் தரும் சொற்கள் என வள்ளலாரே கூறியுள்ளார். ஆக இரக்கம் வேறு, கருணை வேறு அல்ல. வள்ளற் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற வர். தாம் ஏன் வருவிக்க உற்றேன் என வள்ளலாரே காரணம் கூறுகிறார். அதில் சன்மார்க்கம் தழைக்கவும், மனிதர்கள் இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற் கும் இறைவனால் வருவிக்க உற்றேன் என்ற பாடலை அனைவருக்கும் தெரியும்.

சன்மார்க்க சங்கத்தை அனைவரும் பெற்று, இகத்தே பரத்தை அடைந்து

மகிழ்வதற்கு அடிப்படையாய் கருணை வேண்டும். அப்படிப்பட்ட கருணையையும் இரக்கத்தையும் என்னையும் வேவ் வேறாக இல்லாமல், இரக்கமே நானாய், நானே இரக்கமாய் செய்வித்து, அதனோடு நானும், என்னோடு இரக்கமும் பிரியாது நிலைத்து வாழ்வதற்காகவே என்னை வருவித்தவர் ஆண்டவர் என்கிறார். வேறு ஒரு அருட் பாவில் அந்தப் பாடலைப் பார்ப்போம்.


**என்னையும் இரக்கந் தன்னையும் ஒன்றாய்**
**இருக்கவே இசைவித்திவ் வுலகில்**
**மன்னிவாழ் வுறவே வருவித்த கருணை**
**வள்ளல்நீ உனக்கிது விடயம்**
**பன்னல்என் அடியேன் ஆயினும் பிள்ளைப்**
**பாங்கினால் உரைக்கின்றேன் எந்தாய்**
**இன்னவாறெனநீ சொன்னவா ரியற்றா**
**திருந்ததோர் இறையுமிங் கிலையே 3509**

இவ்வாறு கருணையும், இரக்கமும் தானும் ஒன்றாக இருக்கவே தாம் வரு விக்க உற்றதாகக் கூறுகிறார். இந்த இரக்க மாம் கருணை எப்படிப்பட்டது என வின வினால் அது சிவமே வடிவாக இருக்கும் என வள்ளலாரே பாடி, அச்சிவமாகவும் ஆக்கப் பெற்றேன் என்பார் பாடலைப் பார்ப்போம்.

**கருணையும் சிவமே பொருளெனக் காணும்**
**காட்சியும் பெறுகமற் றெல்லாம்**
**மருள்நெறி எனநீ எனக்கறி வித்த**
**வண்ணமே பெற்றிருக் கின்றேன் 3503**

என கருணையாம் சிவமாகவே தான் ஆகியதையும் கூறுகிறார். இப்படி இரக் கமே வடிவாய் ஒன்றாய் இருக்க யாரையும் இறைவன் வருவிக்க உறவில்லை இந்தப் பேறு வள்ளலாருக்கு மட்டுமே வாய்த் தது.

# கலங்காதே நெஞ்சே



வாழ்வில் உங்களுக்கு உண்டாகக் கூடிய துன்பங்களையும், துயரங்களையும் கண்டு துவண்டு விடாதீர்கள். உங்களுக்கு ஏற்படக் கூடிய ஒவ்வொரு கஷ்டத்தையும் வலியையும் உங்கள் மனோபலத்தை அதிகரிப்பதற்கான ஒரு அரிய வாய்ப்பாகக் கருதி அதை எதிர்கொண்டு அழையுங்கள்.

தளறாத ஊக்கத்தையும், சகிப்புத்தன்மையை யும் வளர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் எதிர் கொள்ளும் துன்பங்கள் தான் உங்களின் இச்சா சக்தியை பல மடங்கு அதிகரிக்கின்றன என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள். உங்களுடைய பலவீனத்தில் தான் உங்களுடைய உண்மையான பலம் மறைந்திருக்கிறது.

இவ்வுலகில் எதனாலும், யாராலும் உங்களுக்கு எந்த ஒரு இடையூரையும் உண்டாக்க முடியாது என்பதை உறுதியாக நம்புங்கள். நீங்கள் வெல் லப்பட முடியாதவர்கள். தனித்திருங்கள். அதே சமயம் ஆழ்ந்த விழிப்போடு இருங்கள். எல்லாம் செயல் கூடும்.

# அருள்ஜோதி அன்ன ஆலய சேவாதாரிகள்



திரு.இரவிசந்திரன் ஐயா



திரு.முத்துராஜ் ஐயா



திரு.ஐயப்பன் ஐயா



திரு. வெங்கட்ராமன் ஐயா



திரு.ஜெகதீசன் ஐயா



திரு. ப.ஐயப்பன் ஐயா



திருமதி. சந்தானலட்சுமி அம்மா



செல்வி.ஜெயஸ்ரீ

**மேற்கண்ட படங்களில் உள்ளவர்கள் நமது அன்ன ஆலய சேவாதாரிகள், மற்றவர்கள் அன்ன ஆலயப் பெயரை உபயோகப்படுத்தினால் கீழ்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

**90030 34056**

# 153 வது வள்ளலாரின் தைப்பூசம் அன்னதானம் ஆலயங்கள் பட்டியல்



1. வள்ளலார் அன்னதான சமாஜம் – திரு.வி.க.நகர்
2. வள்ளலார் சபை – திரு.வி.க.நகர்
3. வள்ளலார் ஆலயம் – பேசின்பாலம்
4. வள்ளலார் இல்லம் – மயிலை
5. கிருஷ்ணா பாரடைஸ் – மயிலை
6. பால் முனிஸ்வரர் – வியாசர்பாடி
7. சண்முகம் – திரு.வி.க.நகர்
8. போலீஸ் மாணிக்கம் தெரு – அயன்புரம்
9. மாலதி – மில்லர்ஸ் ரோடு
10. ராயல் அயன் சென்டர் – பெரம்பூர்
11. கேஎல்பி – பேரக்ஸ் ரோடு
12, ரெட்ஹில்ஸ் மார்க்கெட் – கஞ்சி
13. மணலி, மாதவரம் – கஞ்சி
14. தத்பத அடிகளார் சபை – ரெட்ஹில்ஸ்
15. சிவனடியார் குழு
16. பால தண்டாயுதபாணி – வியாசர்பாடி
17. ஆனந்த் – மேட்டுப்பாளையம்



18. சிவாவிஷ்ணு ஆலயம் – பெரியார் நகர்
19. ராஜ்குமார் – அயன்புரம்
20. முத்தம்மன் ஆலயம் – அயன்புரம்
21. சோலையம்மன் ஆலயம் – அயன்புரம்
22. அங்காளம்மன் ஆலயம் – லட்சுமிபுரம்
23. மாமுருகன் – மதுரவாயல்
24. சீனிவாச பெருமாள் – புரசைவாக்கம்
25. சாய்பாபா ஆலயம் – பனந்தோப்பு காலனி
26. அங்காளபரமேஸ்வரி – பெரம்பூர்
27. தணிகை எஸ்டேட் – பெரம்பூர்
28. வள்ளலார் ஆலயம் – பேசின்பாலம்
29. பீலிகான் முனீஸ்வர – வியாசர்பாடி
30. வெற்றி விநாயகர் – சாஸ்திரி நகர்
31. முதியோர் இல்லம் – வியாசர்பாடி
32. ரமணா நகர் – பெரம்பூர்
33. ஓம் சக்தி விநாயகர் – கொடுங்கையூர்
34. மண்ணடி – பாரீஸ்
35. முத்துக்குமாரசாமி ஆலயம் – பாரீஸ்



## கோயம்பேடு

1. ஜி–100 – சந்தானம் –1 டபரா
2. ஜி–110 – கேரட் – 1 டபரா
3. டி–90– தக்காளி – 1 டபரா
4. எப்–32– கருணாகரன் – 1 டபரா
5. இளங்கோ இலை – 1 டபரா
6. பி–104 –தக்காளி – 1 டபரா
7. ஜே–1–கீரை – 1 டபரா
8. எம்–109 – மூர்த்தி – 1 டபரா
9. ஜேய் – 103– அமுகர் மலை – 1 டபரா
10. எச்–78 –பாக்கியராஜ் – 1 டபரா
11. பி–70– கோதண்டன் – 1 டபரா
12. ஏ–41–லெமன் – 1 டபரா
13. இ–113– முரளி – 1 டபரா
14. பத்மநாபன் – 1 டபரா
15. ஜெ–14– ரவிராஜ் – 1 டபரா



அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!**
**வள்ளல் மலரடி வாழ்க வாழ்க !**

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினார் வள்ளல் பெருமானார். மக்கள் அனைவரும் வள்ளல் பெருமானாரின் கொள்கைகளை கடைபிடித்து ஜீவகாருண்ய வழியில் நடந்திட வேண்டுமே என்று வாடினார் நமது தவத்திரு சதீஷ்ராஜ் அடிகளார் ஐயா அவர்கள். தன்னைத்தானே செதுக்கிக் கொண்டவர், சுடப்படும் தங்கம் அணிகலனாகும், செதுக்கப்படும் கல் சிற்பமாக எல்லோராலும் மதிக்கப்படும். இழைக்கப்படும் சந்தனம் இன்ப மணத்தை கொடுக்கும், அகலில் குறைக்கப்பட்டிருக்கும் எண்ணை பிரகாசத்தினை உற்பத்தி செய்து கொண்டு எங்கும் ஒளியை பரவ விடும்.

அதுபோல் தன் நேர்மையான செயலாலும், திடமான எண்ணத்தாலும், சத்தியமான வாக்கினாலும் தூய்மையான ஒழுக்கத்தாலும் உயர்ந்தவர்.

பண்பிலும் பணிவிலும் தயவிலும் தலைசிறந்தவர்.

இந்த சமுதாயத்திற்கு செய்கின்ற செயலில் ஒருபொழுதும் சூரியன் நான் ஒளி கொடுத்தேன் என்று பெருமைபடாது.

நீர்வீழ்ச்சிகள் நீர் கொடுத்தேன் என்று ஆனந்தப்படாது,
காற்று நான் தென்றலாக வந்தேன் என்று கூறிக் கொள்ளாது,
நிலம் நான் எல்லோரும் மிதிக்க வாழ்கிறேனே என்று வருத்தப்படாது,
வான் நான் வெளியாக உள்ளேன் என்று பெருமைப்படாது,
பஞ்சபூதங்களை போல் எதனையும் எல்லோருக்காகவும் செய்துவிட்டு ,
எதனையும் செய்யாதவர் போல் நிலையில் நிலைத்து இருப்பவர்,
நொடிப் பொழுதை கூட வீணாக்காத உத்தமர்.

அவரிடத்தில் நாம் கற்றுக்கொண்ட பாடம் எதுவென்றால், எலும்பு நரம்பு தசை அனைத்தும் வலியில் துடித்தாலும் விரும்பியதை உண்ணாது வருந்தினாலும்,

நினைத்த மாத்திரம் தூங்க முடியாமல் துடித்தாலும், ஒவ்வொரு நொடியும் வீணாக்காது எப்பொழுதும் தொண்டு ஒன்றையே சிந்தித்து கொண்டிருக்கும் அருள் குணத்தவராக உள்ளாரே.

நாம் விரும்பியதை உண்டு வலியில் இல்லாமல் நினைத்த மாத்திரம் நித்திரை கொள்பவர்கள் எவ்வளவு உழைக்க வேண்டும், இறைவனை மறக்கலாமா தொண்டு செய்யாது சுவாசம் இருக்கலாமா என்பதே அவர் விதைத்த விதைகள் இன்று விருட்சமாகிவிட்டது.

சன்மார்க்கம் எங்கும் தழைத்துக் கொண்டிருக்கின்றது.

சீர்மிகு சென்னையை தர்மிகு சென்னையாக்கி வாழ்ந்து வழிகாட்டிக் கொண்டிருக்கின்ற தவத்திரு சதீஷ்ராஜ் அடிகளார் அவர்கள் எங்கும் நடக்கும் தர்மங்களில் எல்லாம் வள்ளல் பெருமானாருடன் இணைந்து நிறைந்து உள்ளார்.



0.04.2024 நமது
வத்தில் சதீஷ் ராஜ்
அடிகளார் ஐயா
அவர்களின் நினைவு
னமான அன்று
அருள்ஜோதி குருகுல
ாடசாலை, பழவேற்காடு
குதியில் குருபூஜை
டைபெற உள்ளது.
அனைவரும் வந்து கலந்து
கொள்ளவும்.

## ஆத்ம தரிசனம்

# நம்மை நாமே திருத்திக்கொள்வது

**சீடன்: நான் இறைவனை அடைய என்ன செய்யவேண்டும் ?**

*குரு:* இறைவனை அடையவேண்டுமானால் முதலில் நீ உன்னுடன் ஒன்றிப் போக வேண்டும். நீ உன்னுடன் சமாதானமாக இருக்க வேண்டும். அப்போது தான் மற்றவர்களுடன் ஒன்றிப்போவதும் உனக்குச் சாத்தியமாகும். உன் உள்ளிருக்கும் ஆத்மாவும், பிறருள் இருக்கும் ஆத்மாவும் ஒன்றுதான் என்று அறியக்கூடும். அந்த 'ஒன்றும் தன்மை' உனக்கு வரவேண்டுமானால், நீ இறைவனிடம், முழுமையாக உன்னைச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்குத் திடமான மனம் வேண்டும்.

**சீடன்: அடிபணிவதற்கும், சரணாகதி செய்வதற்கும் உள்ள வேறுபாடு என்ன?**

*குரு:* அடிபணிவதிலோ அல்லது அடிபணிவதற்கு முன்போ ஆராய்ச்சி நேரக்கூடும். ஆனால், சரணாகதியில் அவ்வாறில்லை. அதில் விடுதலை உண்டு. யாரும் கண்மூடித்தனமாகச் சரணாகதி செய்ய முடியாது. உண்மையை அறிந்தவன்தான் சரணாகதி செய்ய முடியும். சரணாகதி ஒரே ஒரு விதத்தில் தான் நேர்கிறது. அதாவது, நீ உன்னையே சரணாகதி செய்கிறாய். ஆனால், அடிபணிவது என்பது மற்றவன் உன் விருப்பமின்றி உன்னைக் கீழ்ப்படிய வைப்பது.

**சீடன் : ஆன்மிக வழியில் செல்லும் பொழுது பல விதமான தடைகள் ஏற்பட்டு நம்மைக் கீழே இழுத்துவிடுகின்றன. இது எதனால் ?**

*குரு:* தடைகள் ஏற்படும். அவற்றை நீ சவாலாக ஏற்றுக்கொள்ள வேண்டும். உனக்குச் சோதனை ஏற்பட்டால்தான் நீ உறுதிப்பட்டு மேன்மையடைவாய். சில தடைகள் நீயே உண்டாக்கிக்கொண்டவை. அவை உன்னுடைய தவறுகளால் உண்டாகின்றன. நீ நேர்மையாகவும், உண்மையாகவும் இருப்பாயானால் நீ தவறு செய்தாலுங்கூட மேலும் மேலும் கர்மாவைச் சேகரித்துக்கொள்ளமாட்டாய். ஏனென்றால், உன்னுடைய தவற்றை முதலில் நீயே வெளிப்படுத்தி, அதை ஒப்புக்கொண்டு, அதற்காக வருந்துவாய். நீ நேர்மையாகவும், வெளிப்படையாகவும் தவறு என்று உணர்ந்ததை ஒப்புக் கொள்ளவில்லை என்றால் அதனால் பல விதமான பிரச்சினைகள் நேரும்.

**சீடன்: நாம் எவ்வாறு பேசுகிறோம் என்பது முக்கியமான ஒரு விஷயமா?**

*குரு:* எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நீ எப்படிப் பேசுகிறாய் என்பது மிக முக்கியமான ஒன்று. ஓர் அப்பியாசி தேவையற்ற வார்த்தைகளைப் பேசுவது மிகப் பெரிய தவறு. நீ தகாத வார்த்தைகளை உபயோகித்தால் நீயும் தகாதவனாகிறாய். நீ வார்த்தைகளைச் சரியாக உபயோகிக்காமல் அவற்றைப் பலவீனப்படுத்தினால் நீயும் சக்தியற்றவனாகிறாய். உன் பேச்சு அமைதியும் அடக்கமும் உடையதாக இருந்தால் அதுவே உனக்கு வழிகாட்டும். நாம் தெளிவாகப் பேசும் பொழுது நம் மனத்தில் விஷயங்களைப்பற்றி எந்த விதமான குழப்பமும் ஏற்படக்கூடாது. வார்த்தைகளை நிதானமாக பேசவேண்டும். மனத்தில் தெளிவு இருந்தால்தான் இது சாத்தியமாகும்.

**சீடன்: சில சமயங்களில் கவனமின்றித் தேவையற்ற வார்த்தைகளைப் பேசிவிடுகிறேன். இதை எவ்வாறு தவிர்ப்பது?**

*குரு:* பேசும் பொழுது கவனத்துடனும், அடக்கத்துடனும் நிதானமாக யோசித்தும், சீராகவும் வார்த்தைகளைப் பேசு. நேரம் எடுத்துக்கொண்டு பொறுமையாகப் பேசு. நீ பேசும் விஷயத்தை மிகத்தெளிவாகப் பேசு. இது மிக முக்கியம்.

பேச்சில் தயக்கம் இருக்கலாகாது. உண்மையை நாடுபவர்களுக்குத் தயக்கம் கூடாது. நீ ஒரு விஷயத்தையோ, உண்மையையோ வெளிப்படுத்தும் பொழுது அதைத் தயக்கமின்றி வெளிப்படுத்த வேண்டும். அதே போல், உண்மையைத் தேடும் பொழுது தயக்கம் ஏற்படக்கூடாது. அப்படித் தயங்குவாயானால் உண்மையும் தயங்கலாம். பாலத்தில் ஏறி, கீழே நுங்கும் நுரையுமாகச் சீறி ஓடிக் கொண்டிருக்கும் நதியை, மெதுவாகக் கடப்பதில் எந்த உண்மையை வித அபாயமும் இல்லை. அதற்குத் தயங்க வேண்டாம். உண்மையை அறிவதற்கோ, உண்மையை வெளிப்படுத்துவதற்கோ தயங்கக்கூடாது.

**சீடன்: நீங்கள் பேசும் விதம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. உங்கள் வாக்கியங்களுக்குப் பின்னணியில் ஒரு சக்தி உள்ளது. அது எவ்வாறு ஏற்படுகிறது?**

குரு: அந்தச் சக்தி அன்பிலிருந்து தான் வருகிறது. அது ஆத்மாவுக்கு இதம் தரும் சக்தி. பேசும் பொழுது உன் 'உள்ளிருந்து' பேசு. அப்படிப் பேசப்படுவது தான் உண்மை. நீ சுவாசிக்கும் பொழுது, உள்ளும் வெளியுமாக முழுமையாகச் சுவாசிக்கிறாய். ஆனாலும், சிறிதளவு அதை உள்ளே தக்க வைத்துக் கொள்ளவும் செய்கிறாய். பேச்சும் அது போல் இருக்க வேண்டும்.

நீ மௌனமாய் இருந்தபடியே பேசவும் கற்றுக்கொள்ள வேண்டும். உன் மனம் அமைதியாக இருக்க வேண்டும். ஆனால், தேவையான பொழுது சுருக்கமாகத் தேவையான அளவுக்குப் பேசவேண்டும். நீ எண்ணமின்றி இருக்கலாம். மனம் என்பது எண்ணங்களைத் தவிர வேறு ஒன்றுமில்லை. நீ உன்னை லயப்படுத்திக் கொண்டால் உன் மனத்தை உபயோகப் படுத்தாமல் பேசலாம்.

**சீடன்: குழப்பம் என்பது உள்ளிருந்து வருவது அல்லவா?**

குரு: ஆம்; எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அமைதியை இழக்காமல் இருக்க வேண்டும்.

**சீடன் : அமைதியாக இருப்பது எப்படி?**

குரு: எந்த விஷயத்திற்கும் கர்வம் கொள்ளாமல் இருந்தால் அமைதியாக இருக்க முடியும். அடக்கத்துடன் இருந்தால் அமைதியாக இருக்க முடியும். அமைதி கைவரப்பெற்றால் தெளிவு பிறக்கும். யாவற்றிலும் பொதிந்திருக்கும் அழகு புரியும். நீயும் எந்தச் சூழ்நிலையிலும் சௌகரியமாக இருக்க முடியும். உன் குறிக்கோள் பெரிதாக இருக்கும் போது நீ முதலில் சிறு சிறு விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், பெரிய விஷயங்களை நாடுபவனுக்கு, ஏதும் சிறியதாகத் தோன்றாது.

**சீடன்: எனக்கு ஒருவன் தீங்கு இழைத்தாலோ அல்லது என்னைக் கேலி செய்தாலோ அதனால் பாதிக்கப்படாமல் இருப்பது எப்படி?**

குரு: நீ கண்ணீர் வடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை மகிழ்ச்சியான ஒன்றாக மாற்று. உன் கண்ணீரை நீ சிரிப்பால் விரட்டக் கற்றுக் கொள். ஒருவன் அறியாமையினால் உன்னைத் திட்டினாலோ அன்றி உனக்குத் தீங்கு இழைத்தாலோ அதைப் பொருட்படுத்தாமல் சிரித்துவிடு. அது ஒன்றுதான் வழி. நீ எப்பொழுதும் அன்புடன் நடந்துகொண்டால் உன் வார்த்தைகள் செய்ய முடியாததை உன் சிரிப்பு சாதிக்கும். நீ இதை நடைமுறைப்படுத்திப்பார். எதையும் புதிதாக நடைமுறைப்படுத்தும் போது முதலில் சிந்தனை எப்போதும் அதைப் பற்றியே இருக்கும். ஆனால், போகப் போகச் சரியாகிவிடும். ஒரு வாகனத்தை ஓட்ட ஆரம்பிக்கும் போது அது மிகக் கடினமாக இருக்கும். எல்லோரும் உனக்குப் பல விதமான குறிப்புகளை அளிப்பார்கள். "நேரே பார், பிரேக்கில் கவனம் செலுத்து, இங்குமங்கும் பார்க்காதே," என்றெல்லாம் கூறுவார்கள். நீ வாக

னத்தை ஓட்டக் கற்றுக்கொள்ளும் போது இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு போகப் போக, நீ வாகனம் ஓட்டுவதில் தேர்ச்சி அடையும் போது இயல்பாகவே நீ அவற்றைச் செய்வாய். அதுபோல், எந்த விஷயத்திலும் முதலில் குழப்பங்கள் ஏற்பட த்தான் செய்யும். ஆனால், விடா முயற்சி இருந்தால் குழப்பங்கள் நீங்கிவிடும்.

**சீடன் : ஒருவன் நமக்குத் தீங்கு செய்யும் தருணத்திலேயே அவனை முழுமனத்துடன் மன்னிப்பது சாத்தியமா?**

குரு: நீ உன்னுடைய உடலில் இருக்கும் பொழுதே அதிலிருந்து விடுபட்டிருந்தால் உன்னால் அவனை மன்னிக்க முடியும். உன் உடலையே கொளுத்தினாலுங்கூட நீ அதை மன்னித்துவிடுவாய். ஜோன் ஆப் ஆர்க் அப்படித்தான் செய்தாள். அவளை ஒரு வைக்கோல் போரில் கட்டிக் கொளுத்தினார்கள். ஆனால், அவள் இதயத்தில் ஆண்டவனைச் சுமந்து இருந்ததால் அவளுடைய சிறிய இதயம் மட்டும் எரியாமல் இருந்தது. அதனால் அவர்களால் அவள் இதயத்தையோ அவளையோ அழிக்க முடியவில்லை. ஏனென்றால், அவளும், அவளுடைய இதயத்தில் குடிகொண்டு அருள்பாலிக்கும் ஆண்டவனும் வெவ்வேறில்லை. நீயும் அவளைப் போல் இருந்துவிட்டால் உனக்கு யார் தீங்கிழைக்க முடியும்?

# அசைவம் என்பது அருவருக்கத்தக்கதா ?

உயிரற்ற எவ்வுடலும் பிணம் தான். அறிவுடையவர்கள் அதனை உண்பதில்லை.

**உண்ணாமை வேண்டும் புலால் பிரிதொன்றன்**
**புண்அது உணர்வான் பெறின்**

என்கிறார் திருவள்ளுவ பெருந்தகை. நமது உடலில் ஏற்பட்ட காயங்கள் எப்படி சீழ் பிடித்து அருவருக்கும்படி புண்ணாக இருக்குமோ, அதைப் போல தான் எல்லா உயிர்களின் உடல்களும் இருக்கின்றன. அறிவுடையவர்கள் புலாலை பிற உடம்பின் புண் என்று உணர்ந்து அதை ஒதுக்கி விடுவார்கள் என்கிறது திருக்குறள்.

சிலர் அது துறவரத்தார்களுக்காக சொல்லப்பட்டது. இல்லறத்தார்களுக்கு ஆனது அல்ல என்று தவறாக அர்த்தம் செய்து கொள்கிறார்கள். இல்லறத்தார்களாக இருந்தாலும், துறவரத்தர்களாக இருந்தாலும், புண் புண் தான். பிணம் பிணம் தான். அதை உண்ணாதவர்கள் அறிவுடையவர்கள் தான். உண்பது அருவருக்கத்தக்கது தான்.

**பசித்திரு:–**


இந்த உலக மாயையில் மயங்கி விடாமல் ஞானம் என்ற பசியோட கணப்பொழுதும் இருக்க வேண்டும்.

**தனித்திரு:–**

நாம் ஒரு ஜீவ ஆன்மா என்ற உணர்வுடன் பற்றற்று தனிமையை பழக வேண்டும்.

**விழித்திரு:–**

மனம் கிளப்பி விடும் ஆசையெல்லாம் அப்படியே செய்யாமல் சத்விசாரம் செய்து விழிப்புணர்வுடன் ஒவ்வொரு செயலையும் செய்ய வேண்டும்.



# நம்மை தடுக்கும் 7 மறைப்பு நமக்குள் 7 திரை

**கருப்புத் திரை:–** அசுத்த மாயா சக்தி என்னும் கருப்புத் திரையாகிய தேகம யக்கம், மனமயக்கம் நீங்கினால் தான் ஆண்டவரின் மீது உண்மையான அன்பு உண்டாகும்.

**நீலத்திரை:–** சுத்த அசுத்த மாய சக்தி என்னும் நீலத்திரையாகிய உலக மயக்கம் விலகினால் தான் எல்லா உயிர்களிடத்தும் உண்மையான கருணை உண்டாகும்.

**பச்சைத் திரை:–** கிரியா சக்தி என்னும் பச்சைத் திரையாகிய செயல் மயக்கம் விலகினால் தான் அருளின் மேல் முழுமையாக ஆசை உண்டாகும்.

**சிவப்புத்திரை:–** பரசக்தி என்னும் சிவப்பு திரையாகிய பயன் மயக்கம் நீங்கினால் தான் மாயை முழுமையும் நீங்கி ஞான சித்தி கைக்கூடும்.

**பொன்மைத்திரை:–** இச்சா சக்தி என்னும் பொன்மைத்திரையாகிய விருப்ப மயக்கம் நீங்கினால் தான் ஆன்ம அறிவு உண்டாகும்.

**வெண்மைத்திரை:–** ஞான சக்தி என்னும் வெண்மைத்திரையாகிய அறிவு மயக்கம் நீங்கினால் தான் ஆன்ம அனுபவம் உண்டாகும்.

**கலப்புத்திரை:–** ஆதி சக்தி என்னும் கலப்புத்திரையாகிய அனுபவ மயக்கம் நீங்கினால் தான் உண்மை கடவுள் அனுபவம் வாய்க்கும். இந்த உண்மை கடவுள் அனுபவத்தையே வள்ளல் பெருமான் தைப்பூசத்தில் சத்திய ஞான சபைகள் 7 திரை நீக்கி அருட்பெருஞ்ஜோதி தரிசனமாக காட்டினார்.

**அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள் ஆசீர்வாதத்தினால் சென்னையை சுற்றிலும் வள்ளலாரின் தைப்பூச தினத்தில் 235 இடங்களில் அன்னதான நிகழ்வானது நடைபெற்றது. அதனில் சில அருளாளர்களின் இல்லங்களில் அன்னதானம் நடைபெற்ற புகைப்படங்கள்**



சக்சேனா மாம்பலம்



ஹரிஹரன் ஐஸ் டெய்லர்




செல்வராஜ் ஜெல்லடியான் பேட்டை பள்ளிக்கரணை




வத்சலா கோடம்பாக்கம்



கோபிநாத் கோட்டூர்புரம்



செல்வம் திலகம் பள்ளிக்கரணை



ராணி ராஜேந்திரன் போரூர்



சீனு அலமேலு மங்கை
ராஜேஷ் நகர் பள்ளிக்கரணை



சாந்தி வேதாச்சலம் சைதாப்பேட்டை



மணி புளியந்தோப்பு



பாலகிருஷ்ணன் மணலி



ராஜன் குரோம்பேட்டை



சாந்தி எர்ணாவூர்



டி.இரவிச்சந்திரன் ஆர்.கார்த்திகேயன் புதுபெருங்களத்தூர்

# 153 வது வள்ளலாரின் தைப்பூசம் அன்னதானம் இல்லங்கள் பட்டியல்

| பெயர் | இடம் |
|---|---|
| 1. எம்.வெங்கடராமன் கிருஷ்ணகுமாரி | – பள்ளிக்கரணை |
| 2. எஸ்சீனு மங்கை | – பள்ளிக்கரணை |
| 3. எஸ்.செல்வம் – திலகம் | –பள்ளிக்கரணை |
| 4. குமார் | – பள்ளிக்கரணை |
| 5. வி.செல்வராஜ் | – பள்ளிக்கரணை |
| 6. கீதா வேலாயுதம் | – பள்ளிக்கரணை |
| 7. கே.சிதம்பரம் | – பள்ளிக்கரணை |
| 8. பத்மநாபன் | – ஆதம்பாக்கம் |
| 9. எஸ்.இந்திரா சுந்தரமூர்த்தி | – பள்ளிக்கரணை |
| 10. கே.மூர்த்தி நாகம்மா | – பள்ளிக்கரணை |
| 11. டி.ரவிச்சந்திரன்–ஆர்.கார்த்திகேயன் | – புதுபெருங்களத்தூர் |
| 12. பரமசிவம் தீபம் செலக்ஸ் பேன்சி | – புதுபெருங்களத்தூர் |
| 13. ஆர்.கே.சுந்தர் | – மேற்குதாம்பரம் |
| 14. மணவாளன்–தனலட்சுமி | – மேற்குதாம்பரம் |
| 15. வி.ராஜன் | – குரோம்பேட்டை |
| 16. டி.சிவா | – சேலையூர் |
| 17. அர்ஜுனன்–விஜயலட்சுமி | – விருகம்பாக்கம் |
| 18. சீனிவாசன் | – அசோக்நகர் |
| 19. இராமகிருஷ்ணன் | – வடபழனி |
| 20. பொன்பிரியங்கா | – கே.கே.நகர் |
| 21. சீனிவாசு | – வளசரவாக்கம் |
| 22. ராணி எஸ்.ராஜேந்திரன் | – போரூர் |
| 23. சுப்புலட்சுமி சர்வேஷ் | – போரூர் |
| 24. வே.உதயகுமார் பாரதி | – திருவொற்றியூர் |
| 25. ஜெ.வள்ளி | – திருவொற்றியூர் |
| 26. சிவராமன்–சிவகாமி | – திருவொற்றியூர் |
| 27. எ.ராமலிங்கம்–சரசுவதி | – திருவொற்றியூர் |
| 28. குருமூர்த்தி | – திருவொற்றியூர் |
| 29. எ.ஹரிஹரன்–ஐஸ்டெய்லர் | – மணலி புதுநகர் |
| 30. யோகம்–வெங்கடேசன் | –மணலி |

| | | |
|---|---|---|
| 31. | பொன்னம்பலம் (எ) மணி | – மணலி |
| 32. | பாலகிருஷ்ணன் | – மணலி |
| 33. | சாந்தி ஜீவானந்தம் | – எண்ணூர் |
| 34. | எஸ்.தங்கதுரை–உண்ணாமலை | –எர்ணாவூர் |
| 35. | சாந்தி | –எர்ணாவூர் |
| 36. | பவேஷ் தக்ஷன் | – எர்ணாவூர் |
| 37. | ஆர்,பாலாஜி | –மயிலை |
| 38. | கே.கௌரிகுமார் | –மயிலை |
| 39. | ரமேஷ் சீனிவாசன் ஆட்டோ | – மயிலை |
| 40. | கே.ராமலிங்கம் | – இராஜாஅண்ணாமலைபுரம் |
| 41. | ஜி.தோகை கண்ணன் சுரேஷ் | – இராஜாஅண்ணாமலைபுரம் |
| 42. | டி.ஞானசேகர் | – இராஜாஅண்ணாமலைபுரம் |
| 43. | செல்வம் மணிகண்டன் | – இராஜாஅண்ணாமலைபுரம் |
| 44. | டாக்டர் வை.இரத்தினசபாபதி | – இராஜாஅண்ணாமலைபுரம் |
| 45. | பி.மாதவன் | – இராஜாஅண்ணாமலைபுரம் |
| 46. | அதியமான் சுசிலா/ ரவி ஐயர் | – திருவான்மியூர் |
| 47. | பி.குணசேகர் | – கொட்டிவாக்கம் |
| 48. | வாசுகி குணசேகரன் | – பாலவாக்கம் |
| 49. | கே.எ. பாண்டியன் | – துரைப்பாக்கம் |
| 50. | ஆறுமுகம் | – அடையார் |
| 51. | ஜெய்சங்கர் வாழை இலை கடை | – திருவேற்காடு |
| 52. | ராஜா | – திருவேற்காடு |
| 53. | பிரியங்கா, திவ்யா | – ஆவடி |
| 54. | சரவணன் ஹேமாவதி | – பட்டாபிராம் |
| 55. | விக்னேஷ் | – திருநின்றவூர் |
| 56. | எஸ்.கௌதம் | – ஆதம்பாக்கம் |
| 57. | ஆர்.குமார் | – புழுதிவாக்கம் |
| 58. | கருப்பையா | – உள்ளகரம் |
| 59. | வடிவேல் பாலமுருகன் மாவுமில் | – உள்ளகரம் |
| 60. | ஆ.ப.ஆனந்தராமன் | – ஆலந்தூர் |
| 61. | வேல்முருகன் | – மடிப்பாக்கம் |
| 62. | மாரிசாமியார்/தனபால் | – தண்டையார்பேட்டை |
| 63. | மீனாட்சி | – பழையவண்ணாரப்பேட்டை |
| 64. | வசந்தாராணி | – கொருக்குப்பேட்டை |
| 65. | ராம்குமார் அன்பு டீ ஸ்டால் | – கொருக்குப்பேட்டை |
| 66. | எஸ்.எஸ். ஹரிபிரசாத்ராவ் சுதாராணி | –கொருக்குப்பேட்டை |
| 67. | கே.ஏ. கௌரிகண்ணய்யா | –புதுவண்ணாரப்பேட்டை |

| | |
|---|---|
| 68. சிவஜோதி சுவாமிகள் | – ஏழுகிணறு |
| 69. ஜி.சேகர் எஸ்.தமிழ்வேந்தன் | –சூளை |
| 70. ஜி.அனுராதா கணேஷ் | – சிந்தாரிப்பேட்டை |
| 71. ஐயப்பன் சென்ட்ரிங் மேஸ்திரி | – கீழ்பாக்கம் |
| 72. கோபி ஷியாமளா | – சென்னை–600003 |
| 73. சந்திரமோகன் | – அமைந்தகரை |
| 74. மதிவாணன் | –சூளைமேடு |
| 75. சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் | – சூளைமேடு |
| 76. ஜி.என். வத்சலா | – கோடம்பாக்கம் |
| 77. சாந்தி வேதாசலம், வி.ஸ்ருதி | – சைதாப்பேட்டை |
| 78. கருணாகரன் | – சைதாப்பேட்டை |
| 79. டாக்டர். உமேஷ்ராஜ் | – மேற்குமாம்பலம் |
| 80. என்.சொக்கலிங்கம் காந்திமதி | – மேற்குமாம்பலம் |
| 81. டி. விஜயகுமாரி | – மேற்குமாம்பலம் |
| 82. வசந்தி | – கோடம்பாக்கம் |
| 83. இராஜகுமாரி | – அண்ணாநகர் |
| 84. திருஞானசம்பந்தம் | – அண்ணாநகர் |
| 85. வசுந்தராதேவி | – அண்ணாநகர் மேற்கு |
| 86. முருகேசன் | – அண்ணாநகர் மேற்கு |
| 87. எம்.கே. கோவிந்தன் வக்கில் | – அண்ணாநகர் மேற்கு |
| 88. ராஜிலோகேந்திரன் கணேஷ் | – அண்ணாநகர் கிழக்கு |
| 89. பவானியம்மாள் விஜயகுமார் | – முகப்பேர் மேற்கு |
| 90. ஜெயா ஆறுமுகம் | – முகப்பேர் கிழக்கு |
| 91. டி.கே. வெங்கடேசலு | – பெரம்பூர் |
| 92. ஆர். சீனிவாசன் ரேணுகா | – பெரம்பூர் |
| 93. ஹேமாவதி | – பெரம்பூர் |
| 94. மனோகரன் டீ கடை | – பெரம்பூர் |
| 95. குருமெக்கானிக் செட் | – பெரம்பூர் |
| 96. இரமணி–இலக்கியா | – அயன்புரம் |
| 97. ஹரிபாபு | – அயன்புரம் |
| 98. ராஜ்குமார் | – அயன்புரம் |
| 99. மாஸ்டர் அரவிந்த் ஆதித்யா ராமச்சந்திரன் | – மாதவரம் |
| 100. ஒய். பாளையம் பரசுராமன் | – மாதவரம் |
| 101. சி.குமார் | – மாதவரம் பால்பண்ணை |
| 102. எம்.முனுசாமி | – மாதவரம் |
| 103. நீலாவதி | – மாதவரம் |
| 104. சுசிலா | – வியாசர்பாடி |

| | |
|---|---|
| 105. மங்கேஷ்வரி | – வியாசர்பாடி |
| 106. ஜெ.சம்பத்குமார் | – சென்னை 600012 |
| 107. மணி | – சென்னை 600012 |
| 108. மணிவண்ணன் செங்குட்டுவன் | – சென்னை 600012 |
| 109. எம்.முனுசாமி | – சென்னை 600012 |
| 110. சுரேஷ் (ஸ்ரீ கிருஷ்ணா ஸ்டோர்ஸ்) | – சென்னை 600012 |
| 111. கமலா சுந்தர்ராஜன் | – சென்னை 600012 |
| 112. லோகநாதன் மளிகை கடை | – எருக்கஞ்சேரி |
| 113. ஜெயஸ்ரீ ஸ்டோர் உமா அருணாச்சலம் | – சென்னை 600118/ கொடுங்கையூர் |
| 114. எ.ஜோதி | – கொடுங்கையூர் |
| 115. விஜயசாரதி வைத்யா | – இலட்சுமிபுரம் |
| 116. ஹேமதர்ஷினி | – கண்ணதாசன் நகர் |
| 117. வி.ஆறுமுகம் | – வியாசர்பாடி |
| 118. பி.சுரேஷ்பாபு | – எம்.கே.பி. நகர் |
| 119. கே.காசிலிங்கம் | – சேத்துப்பட்டு |
| 120. சம்பந்தம் | – நுங்கம்பாக்கம் |
| 121. இ.விஜயரங்கம் | –தேனாம்பேட்டை |
| 122. ஈஸ்வரி | – தேனாம்பேட்டை |
| 123. இரவிக்குமார்– ஸ்ரீ தேவி | – கோட்டூர்புரம் |
| 124. இராமச்சந்திரன்–ஜெயஸ்ரீ | – அடையார் |
| 125. வி. விஜயகுமார் | – பெசன்ட்நகர் |
| 126. பரிமளா | – ஜி.கே.எம்.காலனி |
| 127. பக்தராமன் ஆதிலட்சுமி | – ஜி.கே.எம்.காலனி |
| 128. கலைசெல்வி | – ஜி.கே.எம்.காலனி |
| 129. ராணி | – ஜி.கே.எம்.காலனி |
| 130. பி.சங்கரதாஸ் | – வெற்றிநகர் |
| 131. சரவணன்,செல்வி,கௌதம், கிரண் | – வெற்றிநகர் |
| 132. வெற்றி விநாயகர் கோவில் | – அனகாபுத்தூர் |
| 133. ஜி.நரசிம்மலு | – அனகாபுத்தூர் |
| 134. என்.தினேஷ்குமார், நித்தியானந்தம் | – கொரட்டூர் |
| 135. பிரகாஷ் | – கொரட்டூர் |
| 136. எஸ்.நாராயணசாமி | – அம்பத்தூர் |
| 137. எம்.கிருஷ்ணவேணி | – அம்பத்தூர் |
| 138. என். கோதண்டராமன், கோமளவள்ளி | – மதுரவாயல் |
| 139. பி.சந்தானம், திலகவதி | – மதுரவாயல் |
| 140. நியூடெக் | – அத்திப்பட்டு |
| 141. கோகுலகிருஷ்ணன் | – அயப்பாக்கம் |

சீகாழி.கண்ணுடைய வள்ளல் அருளிச் செய்த

# ஒழிவில் ஒடுக்கம்

திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் உரையிலிருந்து வினா–விடையாகத் தொகுத்தவர். ஜோதி.வீ.கோட்டீஸ்வரன், காஞ்சிபுரம்.

**31. கடல் சிவநீர் ஆன்மா உப்புமலங் கன்மம்**
**அடர்வாயுப் போதம் அலைகால்–இடைவிடாது**
**அவ்வாதி உட்கரணம் ஐம்பொறியில் பம்பரம் போல்**
**இவ்வாறு உனைச்சுழற்றும் எண்.**

★**திருவருள் ஆன்மாக்களின் கன்மத்துக்கீடாய் நடத்து என்பது எவ்வாறு?**

கடல் போலும் சிவம், அதனுள் நீர்போலும் ஆன்மா, அந்நீருள் பிரிபடாது இருந்த உப்பு போலும் ஆணவம், அந்நீரின் மேல் வீசும் காற்று போலும் கன்மம், அக்காற்றால் எழும் அலைபோலும் போதம் என்பதாம்.

காற்றைப் போன்ற கன்மத்துக்கீடாய் இச்சை, ஞானம், கிரியைகள் பஞ் சமூர்த்திகளைச் செலுத்த, இப்பஞ்சமூர்த்திகள் மனமுதலிய உட்கரணங்களைச் செலுத்த, இவ்வுட்கரணங்கள் ஐம்பொறிகளிடத்து இடைவிடாது நம்மை பம்பரமாய்ச் சுழல வைக்கும் என்பதை நாம் அறிய வேண்டும்.

குறிப்பு: திருவருள் ஆன்மாக்களைக் கன்மத்துக்கீடாய் நடத்துமாறும், அவ்வான்மாக்கள் கரணங்களோடுங் கூடி இந்திரிய வழிச் சென்று விடயங்களைப் புசிக்குமாறும் செய்வது ஆம்.

**32. மண்ணாதி சத்தாதி வாக்கு மனமாதி**
**கண்ணாதி நாதாந்தங் கண்டுஅகன்ற– உண்மை**
**தனை அணுவென் றே யுணர்ந்துஞ் சார்பினையுங் கண்ட**
**உனை அறிவென்(று) உள்ளே உணர்.**

★ **ஆன்மா ஈதென்று எவ்வாறு அறிந்து கொள்வது?**

கருவிகள் முப்பத்தாறும் ஒன்றை ஒன்று அறியாமையாயினும்; தத்தம் குணங்களை தாம் அறியாமையாயினும்; காட்சி கண்ணை அறியாததுபோல், அவைகள் ஆன்மாவை அறிய ஆகலானும்; கண் காட்சிகளை அறிவது போலக் கருவிகள் ஈது ஈதென்று பகுத்து அறிந்து நீங்கி நின்றது ஆன்மா என்பதாம்.

தன்னால் அறியப்பட்ட கருவிகளைச் சடமென்றும், அவற்றைத் தனக்கு அறிவித்தது அருளென்றும், அக்கருவிகள் போல் சடமுமின்றித் திருவருளை போல் பேரறிவு மின்றி நின்று அறிந்த அறிவு தானென்றும், தன்னையும், பாசத்தையும், திருவருளையும் அவ்வருளால் கண்டேன் என்பதாம்.

# சோபகிருது - குரோதி வருடம்
## மாதப்பூசம் திருநாட்குறிப்பு 2024

| நாள் | கிழமை | விழா விவரம் |
|---|---|---|
| 24.01.2024 | புதன் | கொடியேற்றம் |
| 25.01.2024 | வியாழன் | தைப்பூசம் |
| 27.01.2024 | சனி | திருவறை தரிசனம் |
| 21.02.2024 | புதன் | மாதப்பூசம் |
| 20.03.2024 | புதன் | மாதப்பூசம் |
| 16.04.2024 | செவ்வாய் | மாதப்பூசம் |
| 21.04.2024 | ஞாயிறு | அகவல் எழுதிய தினம் |
| 13.05.2024 | திங்கள் | மாதப்பூசம் |
| 24.05.2024 | வெள்ளி | தருமச்சாலை துவக்க நாள் |
| 10.06.2024 | திங்கள் | மாதப்பூசம் |
| 07.07.2024 | ஞாயிறு | மாதப்பூசம் |
| 03.08.2024 | சனி | மாதப்பூசம் |
| 31.08.2024 | சனி | மாதப்பூசம் |
| 27.09.2024 | வெள்ளி | மாதப்பூசம் |
| 05.10.2024 | சனி | வருவிக்கவுற்ற நாள் |
| 24.10.2024 | வியாழன் | மாதப்பூசம் சித்திவளாக பற்றம் |
| 20.11.2024 | புதன் | மாதபபூசம் |
| 21.11.2024 | வியாழன் | மாதப்பூசம் |
| 18.12.2024 | புதன் | மாதப்பூசம் |

## அருள்ஜோதி அன்ன ஆலயத்திற்கு அன்ன தர்மத்திற்க்காக காணிக்கை வழங்கும் கருணை உள்ளங்களின் அனுபவங்கள்

இறைவனின் முழு அருளை பெறவும், சகல செல்வங்களை பெறவும், அன்ன தர்மம் செய்வது முழு பலன் கிடைக்கின்றது. அன்னத்தை நாம் பிறருக்கு தானம் செய்யும்பொழுது பசித்தவர்களின் வயிற்றிற்கு சென்று அவனுடைய உயிரை தக்க வைத்து அவன் வாழ்வதற்கு உண்டான ஆதார சக்தியாக அந்த உணவு மாறு கிறது. உணவு என்பது ஒரு மனிதனின் உயிரை தக்க வைப்பதற்கான வலிமைப் படைத்தது. அப்பேர்ப்பட்ட பெரிய காரியத்தை இடைவிடாது அருள்ஜோதி அன்ன ஆலயம் நிகழ்த்தி வருகிறது. இதில் நானும் ஒரு பங்காக இருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தொடர்ந்து மாதா மாதம் அருள் ஜோதி அன்ன ஆலயத்திற்கு அருள் காணிக்கை வழங்குவதால் கடன் தொல்லை முற்றிலும் நீங்கி மகிழ்ச்சியுடன் வாழ இறைவன் அருள் செய்து இருக்கிறார்.



# திருமணத்தகவல்

### பெயர்: வி.பாலமுரளி கிருஷ்ணா

பிறந்த தேதி: 14.02.1989, படிப்பு: **BEEEE** த/பெ எம்.வெங்கட்ராமன்–கிருஷ்ணகுமாரி,

தொழில்: விப்ரோ ஜிம்டிரைனர் மாதவருமானம்: 35,000,

முகவரி: கதவு எண்.5, பிளாட் எண். 10 அருண்நகர் 1வதுதெரு, பள்ளிக்கரணை, சென்னை 600100.

தொலைபேசி: 9840424764 / 9840525948

### பெயர்: அபிஷேக் மதிவாணன்

பிறந்த தேதி: 03.06.1993, படிப்பு: **B.com M.B.A ,(MIT)**

தொழில்: **Managing director,own business, dealing in IT Hardware equipments**

ஆண்டுவருடம்: *12,00,000*

முகவரி: **B- 106, sargam, Nanded city, sinhagad Road , pune - 411 068.**

தொலைபேசி: *9859859559*

# அருள்ஜோதி TV

அருள்ஜோதி
Aruljothi TV
APP

## TCCL கேபிள் TV Channel No : 125


## நிகழ்ச்சிகளின்
## சன்மார்க்கிகளின் கருத்துக்கள்...










**அருள்ஜோதி தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சிகளை 'ARULJOTHI YOUTUBE CHANNEL' மூலம் காணலாம்.**


**ARULJOTHI MEDIA**

No.:33, KENNEDY SQUARE MAIN ROAD,
TVK NAGAR, PERAMBUR,
CHENNAI – 600011
**CONTACT: 7305263516 044–35519288**
EMAIL: aruljothitelevision@gmail.com
WEB: aruljothitv.com


**BANK DETAILS**

ARULJOTHI SANMARKKA TRUST
INDIAN BANK
A/C.No.:6206014778
IFSC CODE: IDIB000P034
BRANCH : PERAMBUR

Aruljothi TV
+91 73052 63516
8883360800@okbizaxis


**Published by: S. Dhanalakshmi ,**

Published from New No.:33/Old No:17, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 Editor: Thayathirumati. Dhanalakshmi Ammaiyaar Printed at bharanipress, No77, Venkatadhiri street, kosapet, Chennai - 600012

# நீங்களும் அன்னதர்மம் செய்யலாம்

ஒவ்வொரு இல்லறத்தாரும் மாதம் மூன்று கிலோ அரிசியும், அரை கிலோ பருப்பும் கொடுப்பதன் மூலம், மாதம் முப்பது நாளும் தினமும் ஒருவருக்கு அன்னதர்மம் செய்ததன் பலனைப் பெறமுடியும். தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் இத்திட்டத்தில் சேர்வதன் மூலம் சென்னையிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் நாள்தோறும் அன்னதர்மம் நடைபெறச் செய்யலாம். இந்தப் புண்ணிய தொண்டில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் முகவரியை ஆலயத்துக்கு தெரிவித்தவுடன் ஆலயத்தைச் சேர்ந்த சேவாதாரிகள் தாங்கள் செலுத்தும் தருமத்தை நேரில் வந்து பெற்று கொள்வார்கள். மேலும், தங்கள் திருமண நாள், பிறந்த நாள் மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் போன்ற சிறப்பு நாட்களில் அன்ன ஆலயத்தின் மூலம் தாங்கள் விரும்பும் ஆலயத்தில் அன்னதர்மம் செய்யலாம். பெறப்படும் காணிக்கைகளுக்கு வருமானவரி சட்டம் 80 ஜி பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.

## அன்ன தர்மத்தின் சிறப்புகள்

1.அன்ன தருமம் செய்வதன் மூலம் இறைவன் அருளைப் பெறலாம்.

2.நம் சந்ததியினருக்குச் சேர்த்து வைக்கும் அழியாப் புண்ணியச் சொத்து அன்னம் கொடுத்தலே.

3.அனைத்து நோய்களும் நீங்க அருமருந்து அன்னம் கொடுப்பதே ஆகும்.

4.மனக்குறைகள் நீங்கி மகிழ்வுடன் வாழவைப்பது அன்ன தருமமே

5.தொழில் சிறந்து விளங்க அன்னதருமம் செய்வோம்.



6.கடன்கள் நீங்கி மன அமைதி பெற அன்னதர்மம் செய்வோம்.

7.போதும் என்ற மனநிறைவுடன் ஓர் ஆன்மா கூறுமளவுக்கு ஒரு தருமம் உண்டென்றால் அது அன்ன தருமமே. அன்ன தருமம் என்ற திறவுகோலைக் கொண்டுதான் எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவிக்க முடியும். நம் சந்ததியினருக்கு நாம் சேர்த்து வைக்கும் அழியாப் புண்ணியச் சொத்து அன்னம் கொடுப்பதே.

**இந்தப் புண்ணியத் தொண்டில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.**

**பசி தீர்ப்பது** — **பரம புண்ணியம்**


தயவுத்திருமதி. **தனலட்சுமி அம்மையார்,**

எண்: 1 மதுரைசாமி மடம் குறுக்குத்தெரு,
செம்பியம், பெரம்பூர், சென்னை–600011

**தொலைபேசி: 044-25570770 9003034056**



Owned, Published: Thavathirumathi. Dhanalakshmi Ammaiyaar, Published from No.:33, Main Road, Kennedy Square, Thiru.Vi.Ka.Nagar, Perambur, Chennai – 11 and Printed by Bharani-Press Editor: Thayavuthirumati. Dhanalakshmi Ammaiyaar